**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 112/2017</u>**

PW2 – திரு. சேவியர் நாள். 07.06.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கு எந்த சொத்திற்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு முன்பே தெரியும். எனக்கு எப்பொழுது இவ்வழக்கு விவரங்கள் தெரிய வந்தது என்றால் சுமார் 3 வருடங்களுக்குள் தெரியும். இவ்வழக்கு நடந்து வரும் விவரத்தை எனக்கு யார் சொன்னது என்றால் வாதி சொல்லிதான் தெரியும். இவ்வழக்கு எந்த சொத்திற்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி எனக்கு தெரியப்படுத்திய விவரத்தை தான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வாதியின் பூர்வீக சொத்துக்களைப் பற்றி எனக்கு முன்பே தெரியும்.

2. நான் வாதிக்கு பங்காளி முறையா என்றால் இல்லை மாமா முறை ஆகும். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் என்ன சர்வே எண் உள்ளது என்றால் வாதியின் பெரியப்பா சொத்து உள்ளது சர்வே எண் தெரியாது. தாவா சொத்திற்கு

தெற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வாதியின் சொத்து உள்ளது. மேற்படி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. மேற்படி தெற்கு பக்கம் உள்ள வாதியின் சொத்திற்கு தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் தெருவும், வாதியின் வீடும் உள்ளது. மேற்படி வீட்டின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து யாருடையது என்றால் அந்தோணி அம்மாள் என்பவரது சொத்து. மேற்படி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள வாதியின் பெரியப்பா சொத்து உள்ளது சர்வே எண் என்னவென்றால் தெரியாது.

3. வாதிக்கு எத்தனை ஏக்கர் நஞ்சை, புஞ்சை உள்ளது என்றால் சமார் 9 ஏக்கர் இருக்கும். மேற்படி 9 ஏக்கர் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் எவ்வளவு என்றால் 4 ஏக்கர் ஆகும். மேற்படி 4 ஏக்கர் நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும். மேற்படி 4 ஏக்கர் எத்தனை ஏர்ஸ் என்றால் 2.5 ஏர்ஸ் ஆகும். நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் என்னவென்றால் 89 ஆகும். நான் வருவாய் துறையில் வேலை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கற்காத்தகுடி கிராமத்தில் உள்ள நிலத்தின் சர்வே எண் பற்றிய விவரங்கள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதியின் தந்தையும், எனது தந்தையும் அவற்றை பற்றி பேசி உள்ளார்கள் அதன் அடிப்படையில் எனக்கு தெரியும்.

4. வாதியின் தந்தையும், எனது தந்தையும் சொத்துக்களை பற்றி பேசி கொண்டது எப்போது என்றால் 2014 ஆண்டுக்கு முன்பு. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் போக்கு வரத்து துறையில் பேருந்து நடத்துனராக உள்ளேன். தாவா சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவு எவ்வளவு என்றால் தெரியாது. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கோவில் நிர்வாகம்

தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகிறது என்றால் அதைப்பற்றி தெரியாது. நான் வாதி உட்பட பத்து நபர்கள் 1ம் பிரதிவாதி மீதும் அவரை சார்ந்த கிராம காரியதர்சிகள் மீதும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுக்கப்பட்டடது என்றால் சரிதான், கோவில் சொத்துக்களை முறைகேடாக பட்டா மாற்றியது தொடர்பாக கொடுக்கப்பட்டது. வாதியை 1ம்பிரதிவாதி தகாத வார்த்தைகளால் பேசியதாக குற்றவியல் நீதிமன்றதத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் நான் சாட்சியம் அளிக்கவில்லை. நான் வாதிக்கு ஆதாரவாக மேற்படி குற்ற வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றும், சாட்சியம் அளிக்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதி கற்காத்தகுடி காரியதர்சிகளை அவதூறாக பேசியதாக நஷ்ட ஈடு கோரி 1ம் பிரதிவாதியும் அவரை சார்ந்தோர்களும் வாதி மீது நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் அதைப்பற்றி தெரியாது. நான் 1ம் பிரதிவாதியின் மீதும் காரியதர்சிகள் மீதும் கொடுத்த மேற்படி புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அதைப்பற்றி தெரியாது. வாதி எனது உறவினர் என்தாலும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பிரச்சினை இருந்து வருவதாலும் வாதிக்க ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதியும் எனது உறவினர் ஆவார்.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை